**தலைப்பு 145 - சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு **145** - அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடங்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 செப்தெம்பர் 19 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புகள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 17,925.58 மில்லியனாக இருந்ததுடன், அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 14,622.93 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாட்டில் ரூபா 3,302.65 மில்லியன் அல்லது 18.42 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **செலவினம்** | **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது** | | | **தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு** |
|---|---|---|---|---|
| | **தேறிய நிதி ஏற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்பு** | |
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | |
| மீண்டெழுபவை | 955.09 | 932.77 | 22.32 | 2.34 |
| மூலதன | 16,970.49 | 13,690.16 | 3,280.33 | 19.33 |
| **மொத்தம்** | 17,925.58 | 14,622.93 | 3,302.65 | **18.42** |

### 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய விடய இலக்கம் 14501 இன் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்க்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 6.00 | 5.99 | 4.00 | 4.22 | 37.00 | 11.46 |

### 2.3 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சின் கீழுள்ள இரண்டு வைப்புக் கணக்குகளிள் மீதிகளின் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான கூட்டுத்தொகை ரூபா 14.87 மில்லியன் ஆக இருந்தது. விபரம் பின்வருமாறு.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| | ரூபா.மில்லியன் |
| 6000/0000/00/0015/0056/000 | 0.04 |
| 6000/0000/00/0016/0055/000 | 14.83 |
| மொத்தம் | **14.87** |

### 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புகளுக்கமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை

1978 திசெம்பர் 19 திகதியுடைய 842 ஆம் இலக்க பொருளாளர் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் நிலையான சொத்துப் பதிவேடு முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை.

## 3.2 கணக்காய்வு ஐயவினாக்களுக்குப் பதிலளித்தல்

மீளாய்வாண்டின் போது அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்ட 02 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2017 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஐயவினாக்களுக்குரியதாக கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 6,876.88 மில்லியன் ஆக காணப்பட்டது.

## 3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

### பாதீட்டு முரண்கள்

செலவு விடயம் 10 இற்காக மிகை நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையால் அந்த செலவு விடயத்திற்கு உரித்தான ஏற்பாட்டை உபயோகப்படுத்தியதன் பின்னர் சேமிப்பு 15 சதவீதம் முதல் நூற்றுக்கு 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

## 3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.4.1 வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டிற்கு உரித்தான மெய்மையாய்வு சபையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த பொருள் அலகு 156 மிகைகள் பொருள் அலகு 120 பற்றாக்குறைகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 103, 104, 105 மற்றும் 109 பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

(ஆ) மெய்மையாய்வு சபையினால் பாவிக்க முடியாத பொருட்கள் அலகு 11 சம்பந்தமாக பரிந்துரைகள் வழங்கப்படாதிருந்ததுடன் பொருள் அலகு 95 விற்பனை செய்வதற்கும் பொருள் அலகு 42 அழிப்பதற்கும் பொருள் அலகு 02 நவீனமயப்படுத்துவதற்கும் பரிந்துரைகள் வழங்கப்பட்டிருந்தும் அமைச்சினால் 2017 யூலை 31 ஆந் திகதி வரையிலும் அந்த பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

அமைச்சினால் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான தீர்க்கப்படாத பொறுப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 119,084,228 ஆக காணப்பட்டது.

## 3.5 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்களின் விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | |
| நிதிப்பிரமாணம் 94(1) | 1,352,640 | செலவின வடயங்கள் 04 க்காக ஒதுக்கியிருந்த நிதிஏற்பாட்டிலிருந்து உபயோகித்த பின்னர் சேமிப்புக்களை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை** | | |
| (i) XV ஆவது அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு | 469,369 | தனது நியமன நிபந்தனைகளின் பிரகாரம் தொழிலில் நிரந்தரமாக்கப்படுவதற்காகப் பெற்றுக்கொள்ள வேண்டிய யாதேனுமொரு பயிற்சியினை பெற்றுக்கொள்வதற்காகவன்றி, தகுதிகாண் நிலையில் உள்ள உத்தியோகத்தரொருவரை கற்கை அல்லது பயிற்சிக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பக்கூடாது எனினும், அமைச்சின் தகுதிகாண் நிலையில் உள்ள இரண்டு உத்தியோகத்தர்களை தாபன விதிக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைக்கு முரணாக 04 சந்தர்ப்பங்களில் வெளிநாட்டு பயிற்சிக்காக பங்குபற்றச் செய்து அதற்காக செலவு செய்யப்பட்டுள்ளது. |
| (ii) XXIV ஆம் அத்தியாயத்தின் 10.4 ஆம் பிரிவு | 146,545 | 10 வருடங்கள் சேவைக் காலத்தை பூரணப்படுத்தாத உத்தியோகத்தருக்கு பிணையாள் இல்லாமல் இடர் கடன் வழங்கப்பட்டிருந்தது. |
| (இ) தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை | | |
| 2015 மார்ச் 31 ஆம் திகதியின் 02/2015 இலக்க சுற்றறிக்கை | 1,564,097 | விளம்பர நடவடிக்கைகளுக்காக அரச நிதியை பயன்படுத்த முடியாதிருப்பினும் அமைச்சினால் 2016 ஆம் ஆண்டில் 12 சந்தர்ப்பங்களில் வெவ்வேறு கொண்டாட்டங்களுக்கு அறிவித்தல் வழங்குவதற்காக அமைச்சின் நிதிஏற்பாடு உபயோகப்படுத்தப்பட்டிருந்தது. |

**3.6 வெளிநாட்டு செயற்திட்டம்**

---

**வெளிநாட்டு செயற்திட்டங்களின் செயல்முன்னேற்றம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இந்திய அரசினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வீடமைப்பு செயற்திட்டத்திற்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளிலே திட்டமிடப்பட்டிருந்தது. முழு நிதி ஏற்பாடு ரூபா 6,492 மில்லியனாக இருந்ததுடன், குறிப்பிட்ட நிதி நேரடியாக இலங்கையின் இந்தியத்தூதரகத்திற்கு வழங்கி செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்ததுடன் செலவுகள் கணக்குகளில் பேணப்பட்டிருக்கவில்லை. அமைச்சினால் இந்த செயற்திட்டத்தின் பௌதீக செயல்முன்னேற்றம் சம்பந்தமான மதிப்பீடொன்று செய்யப்பட்டிருந்ததுடன் 07 மாவட்ட செயலாளர் காரியாலயங்களிலும் இருந்தும் கிடைத்திருந்த பௌதீக செயல்முன்னேற்றம் அறிக்கையின் அடிப்படையில் ஒவ்வொன்றும் ரூபா 550,000 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட வேண்டிய புதிய 46,000 வீடுகளில் 43,727 வீடுகளும் மற்றும் நவீனமயப்படுத்தப்பட வேண்டிய 1,286 வீடுகளில் 1,282 வீடகள் மாத்திரம் வேலைகள் முடிக்கப்பட்டிருந்தது. மந்தகதியில் நிர்மாணிக்கப்படுகின்ற மற்றும் கைவிடப்பட்ட பிரச்சினைகளுக்குரிய 247 வீடுகளை நிர்மாணித்தல் நடவடிக்கைகளை 2016 யூன் 08 ஆம் திகதிக்கு முன்னர் பூரணப்படுத்தப்படாவிட்டால் அத்தகைய வீடுகளுக்காக செலவு செய்யப்படாத நிதியை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போவதாக இந்திய தூதுவராலயத்தின் மூலமாக அறிவிக்கப்பட்டிருந்தும் அது விடயத்தில் அவதானம் செலுத்தி அவசியமான நடவடிக்கைகள் எதுவும் எடுத்திருக்கவில்லை.

(ஆ) இலங்கை மற்றும் பாகிஸ்தான் அரசுகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வீடமைப்பு செயற்திட்டத்தின் ஊடாக 2016 நவம்பர் 30 ஆந் திகதிக்கு நிர்மாணித்து முடிக்கவேண்டிய 230 வீடுகளுக்காக ஒரு வீட்டிற்கு ரூபா 550,000 படி 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்டிருந்த முழு நிதிஏற்பாடு ரூபா 126,500,000 ஆக இருந்தது. இதில் 73 வீடுகளின் நிர்மாணப் பணிகள் மாத்திரம் முடிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், அத்திவாரம் மட்டத்தில் சுவர் மட்டத்தில் மற்றும் கூரை கதவு மற்றும் ஜன்னல் மட்டத்தில் மாத்திரம் வேலை முடிக்கப்பட்டிருந்த 157 வீடுகளின் வேலைகளை முடிப்பதற்காக முழு நிதிஏற்பாட்டில் 09 சதவீதமான ரூபா 11,000,000 நிதிஏற்பாடு மாத்திரம் சேமிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் பௌதீக செயல்முன்னேற்றம் சம்பந்தமான மதிப்பீடொன்று செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை மற்றும் பஹ்ரெய்ன் அரசுகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வீடமைப்பு செயற்திட்டத்தின் ஊடாக நிர்மாணிக்க வேண்டிய 260 வீடுகளுக்காக ஒரு வீட்டிற்கு ரூபா 550,000 படி 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்டிருந்த முழு நிதி ஏற்பாடு 143,000,000 ஆக இருந்தது. இதில் 120 வீடுகளின் நிர்மாணப் பணிகள் மாத்திரம் முடிக்கப்பட்டிருந்தது. இருந்தும் ஆரம்பிக்கப்படாத 04 வீடுகள் அத்திவாரம் மட்டம் வரை வேலைகள் முடிக்கப்பட்ட 01 வீடு, சுவர் மட்டம் வரை வேலைகள் முடிக்கப்பட்ட 14 வீடுகள் மற்றும் கூரை, கதவு மற்றும் ஜன்னல் மட்டம் வரை வேலைகள் முடிக்கப்பட்ட 121 வீடுகளின் நிர்மாணப்பணிகளை பூரணப்படுத்துவதற்காக முழு நிதிஏற்பாட்டில் 09 சதவீதமான ரூபா 13,025,000 நிதிஏற்பாடு சேமிப்பு மாத்திரம் சேமிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் பௌதீக செயன்முன்னேற்றம் சம்பந்தமான மதிப்பீடொன்று செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை மற்றும் கசகஷ்தான் அரசுகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வீடமைப்பு செயற்திட்டத்தின் ஊடாக நிர்மாணித்து முடிக்க வேண்டிய 47 வீடுகளுக்காக ஒரு வீட்டிற்கு ரூபா 550,000 படி 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்டிருந்த முழு நிதிஏற்பாடு ரூபா 25,850,000 ஆக இருந்தது. இதில் 30 வீடுகளின் நிர்மாணப்பணிக்ள மாத்திரம் முடிக்கப்பட்டிருந்தது. இருந்தும்

சுவர் மட்டம் வரை மாத்திரம் நிர்மாணித்திருந்த 17 வீடுகளின் நிர்மாணப் பணிகளை பூரணப்படுத்துவதற்காக முழு நிதிஏற்பாட்டில் 02 சதவீதமான ரூபா 550,000 நிதிஏற்பாடு மாத்திரம் சேமிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் பௌதீக செயல்முன்னேற்றம் சம்பந்தமான மதிப்பீடொன்று செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சு மற்றும் அதற்கு கீழ் உள்ள 7 நிறுவனங்களையும் கொண்டு நடாத்துவதற்காக 35,000 கன அடியுள்ள கட்டிடமொன்று வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்காக பெறுகை நடவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஒரு கன அடி ரூபா 39.93 க்கு முதலாவது ஆகக் குறைவான 35,000 கன அடியுள்ள கட்டிடமோ ஒரு கன அடிக்கு ரூபா 140 க்கு இரண்டாவது ஆகக்குறைவான 35,000 கனஅடியுள்ள கட்டிடமோ வாடகைக்கு பெற்றுக்கொள்வது பொருத்தமென தொழிலுநுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரைத்திருந்தது. இருப்பினும், அந்த பரிந்துரையை கருத்திற் கொள்ளாமல் ஒரு கன அடிக்கு ரூபா 145 க்கு மூன்றாவது ஆகக் குறைவான 35,100 கன அடியுள்ள கட்டிடத்தை வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்கு பெறுகைகள் குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையை கருத்திற்கொள்ளாமல் விடுவதற்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய எந்தவிதமான காரணங்களும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

இன்னும் மூன்றாவது ஆகக் குறைந்தளவை உடைய கட்டிடம் அரச பிரதான மதிப்பீட்டாளர் மூலமாக ஒரு கன அடி ரூபா 85.70 படி மாத வாடகை ரூபா 3,000,000 க்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், அந்த மதிப்பீட்டிற்கு கட்டிட உரிமையாளர் இணங்கியிருக்கவில்லை எனக் கூறி சந்தையின் வாடகைப் பெறுமதிக்கு ஏற்றவாறு மதிப்பீடொன்றை பெற்றுத்தருமாறு அமைச்சின் செயலாளரினால் 2016 சனவரி 25 ஆந் திகதி அரச பிரதான மதிப்பீட்டாளரிடம் கேட்கப்பட்ட வேண்டுகோளின் பின்னர் ஒரு கன அடி ரூபா 120 படி மாத வாடகை ரூபா 4,200,000 க்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், அரச பிரதான மதிப்பீட்டாளரின் இரண்டாவது மதிப்பீட்டையும் கருத்திற்கொள்ளாமல் ஒரு கன அடி ரூபா 145 படி 35,100 கன அடிகளுக்காக மாத வாடகையாக ரூபா 5,089,500 செலுத்துவது என்ற அடிப்படையில் 2016 மே 10 ஆம் திதகியிலிருந்து 2018 மே 09 வரையான 02 வருட காலத்திற்காக கட்டிடத்தை வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்கான குத்தகை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

இதன் அடிப்படையில் அரச பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டை விஞ்சி மாதத்திற்கு ரூபா 889,500 படி 2016 மே 10 ஆம் திகதியிலிருந்து 2017 ஆகஸ்ட் 10 ஆந் திகதி வரையுமான 15 மாத ாலத்திற்காக ரூபா 13.34 மில்லியனும் அதன் அடிப்படையில் ஒன்றிணைக்கப்பட்ட பெறுமதிக்கு குத்தகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

### 3.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒரு சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக உள்ளது அவதானிக்கப்பட்டது. அவ்வாறான சந்தர்ப்பங்கள் சில கீழே காணிபிக்கப்படுகின்றன.

(அ) அமைச்சரவையிலோ அல்லது அரச நிர்வாக அமைச்சிலோ அல்லது திறைசேரியிலோ முறையான அனுமதிகள் இன்றி யாழ்ப்பாண மாவட்டத்திலே 15 பிரதேச செயலாளர் அலுவலகத்திலுள்ள 488 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 5,552,700 விஷேட கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) அரசியல் காரணமாக வெவ்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தவர்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் அரச நிர்வாக அமைச்சினால் உருவாக்கப்பட்ட குழுவுக்கு உதவுவதற்காக அமைச்சினால் உப குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. அந்த உப குழுவுக்கு உதவுவதெற்கென கூறப்பட்டு இரண்டு

வெளித்தரப்பினர்களை நியமித்து ஒருவருக்கு ஒரு நாளைக்கு ரூபா 1,500 படி 2015 திசெம்பர் மாதம் முதல் 2016 திசெம்பர் மாதம் வரையிலான காலத்திற்கு ரூபா 705,000 செலுத்தப்பட்டிருந்தது.

### 3.9 முகாமைத்துவ பலவீனங்கள்

அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளின் வியாபார முகாமைத்துவத்திற்காக வெளிநாட்டு பயிற்சியை பெற்றுக் கொடுப்பதற்காக 06 அமைச்சின் உத்தியோகத்தர்களை பெயரிட்டு அனுப்புமாறு வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் கேட்கப்பட்டிருந்தது. இருப்பினும், அதற்காக இரண்டு உத்தியோகத்தர்களை மாத்திரம் பெயரிட்டு அனுப்பியிருந்தபடியால் எஞ்சிய சந்தர்ப்பங்கள் அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு பிரயோசனமடைய முடியாதிருந்தது.

### 3.10 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 20 | 11 | 09 |
| (ii) | மூன்றாம் நிலை | 07 | 04 | 03 |
| (iii) | இரண்டாம் நிலை | 104 | 79 | 25 |
| (iv) | ஆரம்ப நிலை | 36 | 27 | 09 |
| | **மொத்தம்** | **167** | **121** | **46** |